

கழக தீர்மானக்குழு செயலாளர், விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், குழந்தை தமிழரசன் அவர்களின் , ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் மலர்தூவி அஞ்சலிசெலுத்தினார். சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், ஒன்றிய கழக செயலாளர்கள் பாவாடைகோவிந்தசாமி, தி.வேல்முருகன், கனக.கோவிந்தசாமி, நகர கழக செயலாளர் க.தண்டபாணி, நகரத் துணைச் செயலாளர்கள் இராமு.நம்பிராஜன், விளையாட்டு மேம்பாட்டு அணி சி.வெ.க.வெங்கடேசன், ஆட்டோபாண்டியன், நகர மன்ற உறுப்பினர்கள் மாணவர் அணி, இளைஞரணி தோழர்கள், குழந்தை தமிழரசனின் குடும்பத்தினர் மகள், நகர மன்ற தலைவர் டாக்டர். சங்கவி முருகதாஸ், டாக்டர் ப.முருகதாஸ் உடனிருந்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் PSNA பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் பள்ளி மாணவர்களுக்கு அரசியல் அமைப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக “ YOUNG INDIANS PARLIAMENT” என்ற தலைப்பில் இந்திய நாடாளுமன்ற வடிவமைப்பில் இரண்டு நாள் நடைபெறும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. உரையாற்றினார். உடன் கல்லூரி நிர்வாகிகள் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

### நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# அம்பாசமுத்திரம், நாங்குநேரி - இராதாபுரம் தொகுதி பாக முகவர்கள் பி.எல்.ஏ.-2 கூட்டம்!

### கனிமொழி கருணாநிதி – அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை! இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை,ஜூலை.10-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க அம்பாசமுத்திரம்,நாங்குநேரி, இராதாபுரம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் (BLA 2) ஆலோசனைக் கூட்டம் வருகிற 14.07.2025 காலை 9 மணிக்கு அழகு மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள், கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என் நேரு ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர் என நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர்



இரா. ஆவுடையப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய வழிகாட்டுதல்படி, நெல்லை கிழக்கு மாவட்டம் அம்பாசமுத்திரம், நாங்குநேரி, இராதாபுரம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகின்ற, 14.07.2025 திங்கள்கிழமை அன்று காலை 09.00 மணிக்கு நாகர்கோவில் சாலை செங்குளம் அழகு மஹால் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் ஆலோசனைகள் வழங்குவதற்காக கழகத் துணைப் பொதுச் செயலாளர், மண்டல தேர்தல் பொறுப்பாளர், நாடாளுமன்ற குழு தலைவர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, எம்.பி அவர்கள்,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு ஆகியோர் வருகை தந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கள் நாங்குநேரி என்.சுரேஷ்ராஜன், அம்பாசமுத்திரம் எம். ஜோசப்ராஜ், இராதாபுரம் எம்.சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

நிகழ்வில் மாவட்ட கழக நிர்வாகிகள்,மாநில அணி நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், செயலா ளர்கள் பாகமுகவர்கள் (BLA 2 ) அவசியம் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமை!

# மதுரை தெற்கில் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்கக் கூட்டம்!

### ஆர்.எஸ்.பாரதி – திண்டுக்கல் லியோனி – சூர்யா வெற்றிகொண்டான் – ஜோஸ்பின் இலக்கிய ராணி சிறப்புரை!

மதுரை, ஜூலை. 10-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் 102 வது பிறந்தநாள் விழா திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (10.07.2025) மாலை 5:30 மணி, ஜவஹர் நகர், (ரவுண்டானாவிற்கு மேற்கு பகுதி ) திருமங்கலத்தில் நடைபெறுகின்ற மதுரை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள்,

கழக கொள்கை பரப்புச் செயலாளர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், கழக இளம் பேச்சாளர் ஜோஸ்பின் இலக்கிய ராணி ஆகியோர்கள் சிறப்புரையாற்றுகிறார்கள்.

இளைஞர் அணி அமைப்பாளர் விமல், நகர செயலாளர் ஸ்ரீதர், நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக்குமார், கழக நிர்வாகிகள் ஆர்.முத்துக்குமார், ஆதவன் அதியமான் உள்ளிட்டோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்தில் மதுரை தெற்கு மாவட்ட கழகத்தைச் சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநில நிர்வாகிகள், ஒன்றிய நகரப் பகுதி பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள், வட்ட வார்டு கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி, விவசாய அணி உள்ளிட்ட கழக சார்பு அணிகளின் மாவட்ட ஒன்றிய நகர பகுதி பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு தங்கள் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மதுரை தெற்கு மாவட்ட திமுக மற்றும் மதுரை தெற்கு மாவட்ட இளைஞர் அணியினர் செய்து வருகின்றனர்.

### கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில்

# கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்!

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!

கோவை,ஜூலை.10-

தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை செம்மொழி நாள் விழாவாக கொண்டாடும் வகையில் கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்த தான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்” நடைபெற உள்ளது என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்கா நல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு : தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஓய்வில்லாச் சூரியன், தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொது வாழ்க்கைக்குச் சொந்தக்காரர், ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு காலப்பங்களிப்பாளர், அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டு அரசியலின் அச்சாணியாக செயல்பட்டவர், களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர், இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர், இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர், உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் ‘தமிழினத் தலைவர்’ கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை செம்மொழி நாளாக கொண்டாடும் வகையில் கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் ஏற்பாட்டில் “தளபதி” இரத்ததான இயக்கம் சார்பில் கோவை அரசு மருத்துவமனைக்கு “இரத்த தானம் வழங்கும் முகாம்” 11.07.2025, வெள்ளிக்கிழமை அன்று காலை 08.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை வரதராஜபுரம் சாய் விவாகா மகாலில் நடைபெற உள்ளது. இம்முகாமில் மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பங்கேற்று வாழ்த்துரை வழங்குகிறார்.

அதுசமயம், இந்நிகழ்வில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர் மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர், பகுதிக் கழகச் பொறுப்பாளர்கள், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள், பாக முகவர்கள் (BLA2) , பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா. கார்த்திக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிகுப்பட்ட ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள் BDA பூத் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்திய ஒன்றிய அரசிற்கும் தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசிற்கும் இடையில் நடக்கிற இந்த ஜனநாயக போரில் தமிழ்நாட்டின் மண்,மொழி, மானம் காக்க அனைவரையும் ஓரணியில் ஒன்றிணைக்கும் பணியை விரைந்து முடிக்க அறிவுறுத்தி பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் உள்ளிட்ட கழக மாநில, மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் அனைவரும் பங்கேற்றனர்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதியில் உங்களுடன் ஸ்டாலின் எனும் திட்டத்தின் கீழ் பரமக்குடி வடக்கு நகருக்கு உட்பட்ட மஞ்சள் பட்டினம், தர்மராஜபுரம் ஆகிய பகுதிகளில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் 13 துறைகளில் 43சேவைகளை பொதுமக்கள் பயன்பெறுமாறு விவரங்களையும் விண்ணப்ப படிவத்தையும் வீடு வீடாகச் சென்று வழங்கி திட்ட முகாமை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, வட்டாட்சியர் வரதன், வடக்கு நகர் செயலாளர் ஜீவரத்தினம் வடக்கு நகர் இளைஞர் அணி அமைப்பாளர் சேதுபதி, நகர்மன்ற உறுப்பினர்கள் தேவ கிட்டு, அப்துல்மாலிக், நகராட்சி பொறியாளர் சுரேஷ் மற்றும் நகராட்சி அலுவலர்கள் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

### ரெட்டியார் சத்திரம் வடக்கு – தெற்கு ஒன்றியத்தில்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ இணைய தள உறுப்பினர் சேர்க்கை முகாம்!

### எம்.வி.ரெங்கசாமி – பால்ராஜ் தலைமையில்!

சின்னாளபட்ட, ஜூலை 10-

ரெட்டியார்சத்திரம் வடக்கு மற்றும தெற்கு ஒன்றியத்தில் உள்ளாட்சி பிரதிநிதிகள் “ஓரணியில் தமிழ்நாடு” இணையதள உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. கொத்தப்புள்ளி ஊராட்சியில் எம்.வி.ரெங்கசாமியும், கரிசல்பட்டி ஊராட்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பால்ராஜ் தலைமையில் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க, மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.க கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்கும் வகையில் “ஓரணியில் தமிழ் நாடு” இணைய தள உறுப்பினர் சேர்க்கையை திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். அதனைதொடர்ந்து ஒவ்வொரு மாவட்டங்களிலும் அமைச்சர்கள் மற்றும் மாவட்ட கழக செயலாளர்கள் “ஓரணியில் தமிழ்நாடு” இணையதள உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தனர்.

திண்டுக்கல் துரைராஜ் நகரில் உள்ள அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் இல்லத்தில் “ஓரணியில் தமிழ்நாடு” இணையதள உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்தார்.

அதன்பின்னர் ஒன்றியம், பேரூர்கழகம், கிளைக் கழக நிர்வாகிகள் தங்கள் பகுதியில் “ஓரணியில் தமிழ்நாடு” இணையதள உறுப்பினர் சேர்க்கையை தொடங்கி வைத்து தீவிரமாக திமுகவிற்கு இணைய தளம் மூலம் உறுப்பினர் களை சேர்த்து வருகின்றனர். ரெட்டியார் சத்திரம் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கொத்தப் புள்ளி ஊராட்சியில் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் எம். வி.ரெங்கசாமி தலைமையில் தகவல் தொழில்நுட்ப அணியை சேர்ந்த சக்தி வேல், சிவா, ரவீந்திரன், கோபி, ராஜேந்திரபாண்டியன், கிளை செயலாளர் கண்ணன் ஆகியோர் வேலாம்பட்டி, தாதங் கோட்டை, உட்பட அருகிலுள்ள கிராமங்களுக்கு சென்று ஓரணியில் தமிழகம் திமுக உறுப்பினர் சேர்க்கையை தீவிரப் படுத்தியதோடு நூற்றுக்கும் மேற்பட்டவர்களை திமுக உறுப்பினர்களாக இணையதளம் மூலம் இணைத்தனர்.

சென்ற இடமெல்லாம் பொதுமக்கள் உற்சாகமாக தி.மு.க.வில் இணைந்தது குறிப்பிடத்தக்கது. இது போல ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் எம்.இன்பராஜ் வழிகாட்டுதலின்படி கரிசல்பட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் பால்ராஜ் தலைமையில் முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் சுப்பு லெட்சுமி வள்ளுவதாஸ், ஆசிரியர் இளவரசு மற்றும் சசிகலா, அற்புதம், பிரின்சியா, ஆகியோர் கரிசல்பட்டி ஊராட்சியில் பாகம்எண்: 40, மற்றும் 42க்கு உட்பட்ட கரிசல்பட்டி ஆதிதிராவிடர் நகர், நடுத்தெரு, தெற்குத்தெரு, ஆகிய பகுதிகளில் ஓரணியில் தமிழகம் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கையை தீவிரப் படுத்தியதோடு தமிழக அரசின் சாதனை திட்டங்களையும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கரிசல்பட்டி கிராமத்திற்கு செய்த நலத்திட்டங்களை எடுத்துக்கூறி ஒரே நாளில் 100 உறுப்பினர்களை தி.மு.க.வில் இணைத்தனர்.

இது குறித்து கரிசல்பட்டி பால்ராஜ் கூறுகையில் ஓரணியில் தமிழகம் திமுக உறுப்பினர் சேர்க்கைக்காக வீடு வீடாகச் செல்லும் போது அவர்கள் காட்டிய வரவேற்பு எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இதன்மூலம் தமிழக அரசின் நலத்திட்ட உதவிகள் மூலமும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் செய்த நலத்திட்ட உதவிகள் மூலமும் அவர்கள் பயன் பெற்றுள்ளார்கள் என்பது தெரியவந்தது என்றார்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி பெரியகுளம் வடக்கு ஒன்றியம் சார்பாக வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டியன், தலைமையில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய வாக்காளர் சேர்ப்பு நடைபெற்றது. உடன் சில்வர்பட்டி கிளை செயலாளர்கள் மாயன், முருகன், தங்கவேல்,காமையா, வெங்கடாசலம், பொறியாளர் அணி ராம்ஜி. இளைஞர் அணி முருகபாண்டி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



திருப்புவனம் மேற்கு ஒன்றியம். கீழடி பசியாபுரம். பாக எண்.41.42.43.44. ஆகிய பகுதிகளில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என புதிய உறுப்பினர் சேர்க்கும் பணிகளை மாவட்ட கழக துணை செயலாளர் சேங்கைமாறன். ஒன்றிய செயலாளர் வசந்தி சேங்கைமாறன் பார்வையிட்டனர்.